**ஊடக அறிக்கை**

**உஸாத் அம்ஜத் அலி கான், அயான் அலி பங்கஷ் மற்றும் அமான் அலி பங்காஷ் ஆகிய மூன்று சரூட் வாத்திய விற்பன்னர்களும் ஒரே மேடையில் இசை நிகழ்ச்சி**

சரூட் விற்பன்னர் உஸாத் அம்ஜத் அலி கான் மற்றும் அவரது புதல்வர்களான அமான் அலி பங்காஷ் மற்றும் அயான் அலி பங்காஷ் ஆகியோர் கலந்து அளிக்கும் "அமைதியின் நரம்புகள்" எனும் ஒரு விசேட கலாச்சார நிகழ்வு, கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தினால் 70 ஆவது இந்திய குடியரசு தினத்தைக் குறிக்கும் முகமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இது, இலங்கையில் அவர்களது முதலாவது இசை நிகழ்ச்சியாகும். பிரபல்யமான வாத்தியக் கலைஞர்களான திரு. சத்தியஜித் தல்வாக்கர் மற்றும் திரு.ஷுப் மஹாராஜ் ஆகியோரும் இம்மூவருடன் இந்த இசை நிகழ்ச்சியில் இணைந்து கொள்வார்கள்.

இந்த வாத்திய இசைக் கருவியை வாசிக்கின்ற பாரம்பரியமொன்றின் ஆறாவது தலைமுறையைச் சேர்ந்த உஸாத் அம்ஜத் அலி கான், சாரூட் வாத்தியத்தில் 20 ஆம் நூற்றாண்டின் ஒரு தலைசிறந்த விற்பன்னர்களில் ஒருவராவர். இந்திய அரசாங்கத்தினால் மதிப்பு மிக்க பத்ம பூஷண் விருது வழங்கி கௌரவிக்கபட்டதிற்கப்பால், உஸ்தாஜி யுனெஸ்கோ மற்றும் யுனிசெப் என்பவற்றிடமிருந்தும் சர்வதேச விருதுகளையும் பெற்ற ஒருவராவர். தங்களது தந்தையின் இசைப் பாரம்பரியத்தைத் தொடர்ந்து முன்னெடுத்து வரும் அமான் அலி பங்காஷ் மற்றும் அயான் அலி பங்காஷ் ஆகிய இருவருமே தனிப்பட்டதும் மற்றும் தனித்துவமானதுமான இசை ஞானத்தை தங்களது சிறிய வயதுகளிலேயே வளர்த்துக் கொண்டனர்.

இவ்விசை நிகழ்ச்சிஇ ஜனவரி 25 ஆம் திகதிஇ வெள்ளிக் கிழமை, பிற்பகல் 6.45 அளவில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு பிரதான மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்வானது இலங்கை அரசாங்கத்தின் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு, பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம் மற்றும் தாஜ் சமுத்திரா ஆகியவற்றின் அனுசரனையுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிகழ்ச்சிக்கான அனுமதி இலவசம். ஜனவரி 16 ஆம் திகதியிலிருந்து சுவாமி விவேகானந்த கலாச்சார நிலையத்தில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான அனுமதிகள் (பாஸ்கள்) கிடைக்கப் பெறும். மேலதிக விபரங்களுக்கு, சுவாமி விவேகானந்த கலாச்சார நிலையத்தை (முன்னர், இந்திய கலாச்சார நிலையம் என அறியப்பட்டது) 011-2684698 அல்லது iccrcolombo2@gmail.com எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

****

கொழும்பு
ஜனவரி 18, 2019